# தமிழ் மக்கள் மீது திணிக்கப்படும் பொலிஸ் பயங்கரவாதம் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நாம் தயார்!

## கஜேந்திரகுமார் எம்.பி. மட்டக்களப்பில் தெரிவிப்பு



திட்டமிட்டு தமிழ் மக்கள் மீது திணிக்கப்படுகின்ற பொலிஸ் பயங்கரவாதத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அமைப்பாளர் உள்ளிட்டவர்களை மட்டு சிறைச்சாலைக்கு சென்று சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தமிழ் மக்கள் மீது திணிக்கப்படுகின்ற பொலிஸ் பயங்கரவாதத்திற்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்வோம்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கடந்த 25, 27 ஆம் திகதி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியைச் சேர்ந்த இருவர் உட்பட 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் அரசாங்கமே நினைவு கூறலாம் என தெரிவித்துவிட்டு வடக்கு கிழக்கிலே மூதூர், சம்பூரை தவிர தவிர அனைத்து நீதிமன்றங்களிலும் தடை உத்தரவு பெறுவதற்கு பொலிசார் முயற்சி எடுத்தபோது அனைத்து நீதிமன்றங்களிலும் நினைவு கூருவதற்கு உரிமை உண்டு என தீர்ப்பு வழங்கப்பட்டது.

அதேவேளை விடுதலைப்புலிகள் தடைசெய்யப்பட்ட அமைப்பு என்ற வகையில் அந்த அமைப்பின் சின்னங்கள் இல்லாமல் அந்த நினைவேந்தல் நடைபெறமுடியும் எனவும் கட்டளை வழங்கப்பட்டது.

2➤

மாலைக்கதிர்
Maalaikkathir

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூஆடை
Poo Aadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 15 வெள்ளிக்கிழமை 01.12.2023 கதிர் 125

## பொலிஸ் உத்தியோகத்தர் மீது கத்தித் தாக்குதல் இருவர் வெள்ளவத்தைப் பொலிஸாரால் கைது

நாரஹேன்பிட்ட பகுதியில் நேற்றைய தினம் பொலிஸ் உத்தியோகத்தர் மீது கத்தித் தாக்குதலில் ஈடுபட்ட மூன்று சந்தேக நபர்களில் இருவர் வெள்ளவத்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் தற்போது கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக

2➤



## கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க அமைப்புகளின் பிரதிநிதிகளின் கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில்

இலங்கையில் இருக்கின்ற கடற்றொழில் மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர் அமைப்புக்களின் பிரதிநிதிகளின் கலந்துரையாடல் ஒன்று இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண கடற்றொழிலாளர்களுடைய அழைப்பை ஏற்று இலங்கையில் இருக்கின்ற கடலோர மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், கிராமிய அமைப்புகளின் தலைவர்கள் இணைந்து யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இந்தக் கலந்துரையாடலை நடாத்தினர்.

வடக்கு, கிழக்கு தெற்கு மற்றும் மேற்கு என நான்கு திசைகளையும் இணைத்து ஒன்றுபட்டு எதிர்காலத்தில் ஒற்றுமையாகச் செயல்படுவதன் நோக்கமாகவே இந்த விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலுக்கு, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளரும், உலக மீனவர் இயக்கத்தின் செயலாளருமான ஹேமன் குமார, சமூகச் செயற்பாட்டாளர் செல்வின் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கைததான ஜெரோம் பெர்னாண்டோ நீதிமன்றத்திற்கு அழைத்துவரப்பட்டார்



குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் இன்று கைது செய்யப்பட்ட போதகர் ஜெரோம் பெர்னாண்டோ கோட்டை நீதவான் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்று இரண்டாவது நாளாக வாக்கு மூலம் வழங்குவதற்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் ஆஜராகியிருந்த நிலையில் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

பௌத்தம் உள்ளிட்ட மதங்களை இழிவுபடுத்தியதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## க.பொ.த. (சா/தர) விடைத்தாள்கள் குப்பைக் குவியலில் கண்டெடுப்பு

### ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின்



க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை சம்பந்தமான ஐம்பத்திரண்டு (52) விடைத்தாள்கள் குப்பைக் குவியலில் இருந்து பரீட்சை திணைக்கள அதிகாரிகள் கண்டெடுத்ததாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

விடைத்தாள்களை மதிப்பீடு செய்த பிறகு, அந்த விடைத்தாள்கள் எறியப்படவுள்ள கழிவுக் கடதாசிகளுடன் ஒன்றாக சேர்த்து குப்பைக் குவியலில் வீசப்பட்டிருந்ததாகவும் பொதுச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் நம்பிக்கையை சிதைக்கும் இந்த சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே, பரீட்சை திணைக்களம் வெளிப்படையான விசாரணைகளை நடத்தி இதுபோன்ற சம்பவங்களை சாதாரண தவறுகள் என ஒதுக்கிவிடக்கூடாது எனவும், இந்த விடைத்தாள்களை இவ்வாறு வீசி எறிந்தமை கூட இம்முறை பரீட்சை முடிவுகள் வெளியாவதில் ஏற்பட்ட தாமதத்திற்கு காரணமாக இருக்கலாம் எனவும் ஜோசப் ஸ்டாலின் கூறியுள்ளார்.

கல்வித்துறை அதிகாரிகளின் அலட்சியம் மற்றும் கவனக்குறைவால் இவ்வாறு பல்வேறு நெருக்கடிகள் உருவாகி உள்ளதாக தெரிவித்த ஜோசப் ஸ்டாலின், இது குறித்து தொழிற்சங்கங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தாலும் இதுவரை உரியவர்களிடமிருந்து பதில் எதுவும் கிடைக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (ரெதி-01)

## தேசபந்து தென்னகோனின் நியமனம் அரசியலமைப்பு சபை அனுமதியளிப்பு



சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை பதில் பொலிஸ் மா அதிபராக நியமிப்பதற்கு அரசியலமைப்புச் சபை அனுமதி வழங்கியுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இதனை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பதில் பொலிஸ் மா அதிபராக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன்

2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எப்போது நடத்தப்படும்? என்ன காரணத்தினால் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது?

## எதிர்க்கட்சித்தலைவர் சஜித் சரமாரியாகக் கேள்வி!

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பான இறுதி வர்த்தமானி அறிவித்தல் எப்போது வெளியிடப்பட்டது என்பது குறித்து தெளிவுபடுத்தப்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அரசாங்கம் பிற்போட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டுவரை இந்தத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி நாடாளுமன்றில் அறிவித்திருந்தார்.

அரசமைப்புக்கு இணங்க, ஜனாதிபதிக்கு தேர்தல் ஒன்றை பிற்போடும் அதிகாரம் இல்லை.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பான இறுதி வர்த்தமானி அறிவித்தல் எப்போது வெளியிடப்பட்டது? இதற்கிணங்க, எப்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படும்? என்ன காரணத்தினால் இந்தத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது?

2025 வரை இந்தத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளதாக எதனை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதி அறிவித்தார்?

எல்லை நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும், நிதியில்லை என்றும் பல காரணங்கள் கூறப்பட்டன.

தேர்தலை நடத்தினால், தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இராஜினாமா செய்ய வேண்டும் என்றெல்லாம் அரசாங்கம் அழுத்தம் பிரயோகித்தது.

இந்தத் தேர்தலுக்காக எப்போது வேட்புமனுக்கள் கோரப்பட்டன? வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய எத்தனை வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன?

வேட்புமனு தாக்கல் செய்த அரச அதிகாரிகள், இன்று பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள்.

இவர்களின் தொழில் இல்லாது போயுள்ளது. எத்தனை பேருக்கு அரச இவ்வாறு தொழில் இல்லாது போயுள்ளது?

இவர்களின் உரிமை மீறப்பட்டமைக்கான பொறுப்பை யார் ஏற்றுக் கொள்ள வேண்டும்? மீண்டும் இவர்களை எப்போது சேவையில் இணைத்துக் கொள்வீர்கள்?

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது? தேர்தலை பிற்போட்டமையால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு யார் காரணம்?, என்று பல கேள்விகளை அவர் நாடாளுமன்றில் எழுப்பியிருந்தார்.

### தமிழ் மக்கள் மீது திணிக்கப்படும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில், அந்த நினைவேந்தலில் கலந்து கொண்டு அதனை ஒழுங்கு செய்த ஒரே ஒரு காரணத்திற்காக இந்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் நியாயமில்லாத பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தெரிந்து, அதனுள் போகாது நடந்து கொண்டபோதும் அவர்கள் மீது குறிவைக்கப்படுகின்றது.

இதனைத் தமிழத் தேசிய மக்கள் முன்னணியாகிய நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்.

இந்தப் பயங்கரவாதத்தை மக்கள் மீது திணிக்கின்ற செயற்பாடுகளுக்கு அடிபணியாது நாங்கள் இதை எதிர்நோக்க வேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பம். நாங்கள் இதனை எதிர்கொள்வோம், எனவும் அவர் தெரிவித்தார்.

### பொலிஸ் உத்தியோகத்தர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் உறு திப்படுத்தியுள்ளனர்.

பொலிஸாரின் கூற்றுப்படி, காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் போக்குவரத்து கடமையில் இருந்த மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் இருவரும் ஹவ்லொக் வீதியில் வீடமைப்புத் தொகுதிக்கு அருகில் நின்று, கொழும்பிலிருந்து கிருலப்பனை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளொன்றை நிறுத்தியுள்ளனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் குறித்த மோட்டார் சைக்கிளை நெருங்கியதும் சந்தேகநபர்கள் நாரஹேன்பிட்டி உத்யான வீதியை நோக்கி ஓடியதைத் தொடர்ந்து பொலிஸார் அவர்களை மோட்டார் சைக்கிளில் துரத்திச் சென்றுள்ளனர். இந்தத் துரத்தலின் போது, சந்தேக நபர்களில் ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தரை கத்தி மற்றும் கண்ணாடிப் போத்தல் மூலம் குத்திவிட்டுச் சென்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்திலீடுபட்ட மூன்று நபர்களில் இருவர் கைது செய்யப்பட்ட அதே நேரத்தில், ஒரு நபர் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தற்போது பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் இராஜகிரியவில் திருடப்பட்ட ஒன்று எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (த)

### தேசபந்து தென்னகோனின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் நியமிக்கப்பட்டார். ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இந்த நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

குறித்த நியமனம் நவம்பர் 29 முதல் 3 மாத காலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபராக பணியாற்றிய சி.டி விக்ரமரத்ன கடந்த 25ஆம் திகதி தனது பதவியில் இருந்து ஓய்வு பெறவுள்ளதாக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்களுக்கு அறிவித்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் ஊடாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான்காவது முறையாக அவருக்கு வழங்கப்பட்ட சேவை நீடிப்பு நிறைவடைந்ததைத் தொடர்ந்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சி.டி.விக்கிரமரத்ன கடந்த மார்ச் மாதம் 25ஆம் திகதி பொலிஸ் மா அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெறவிருந்தார். ஜனாதிபதி அவருக்கு 3 மாத சேவை நீடிப்பை வழங்கியதுடன், அந்த காலம் முடிவடைந்த பின்னர், ஜூலை 9 முதல் அமுலுக்கு வரும் வகையில் மேலும் 3 மாத சேவை நீடிப்பு அவருக்கு வழங்கப்பட்டது.

மூன்றாவது முறையாக மேலும் 3 வார சேவை நீடிப்பு ஒக்டோபர் 13 அன்று சி.டி. திரு.விக்கிரமரத்னவிற்கு வழங்கப்பட்டது.

அதையடுத்து, நான்காவது சேவை நீடிப்பும் அவருக்கு வழங்கப்பட்டது, இது நவம்பர் மாதம் 3 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை அமுலுக்கு வந்தது.

ஆயினும், சி.டி.விக்ரமரத்னவின் சேவை நீடிப்புக்கு அரசியலமைப்புப் பேரவை அங்கீகாரம் வழங்க மறுத்திருந்தது. அதனால், அந்த விடயத்தில் குழப்பம் நிலவியது.

இந்த நிலையில், பதில் பொலிஸ் மா அதிபராக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை நியமிப்பது தொடர்பில் அரசியலமைப்புச் சபைக்கு அறிவிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.








**விற்பனையாளர் தேவை**

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

**உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட**
maalaikkathir@gmail.com

**செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட**
காலைக்கதிர் TV
**காலைக்கதிர் TV YouTube தளம்**

# இங்கிலாந்து போலேட் வில்சன் செயற்பாட்டாளர் விருது சாய்ந்தமருது சிறுமி மரியம் ஜெஸீம் தகுதி பெற்றுள்ளார்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இங்கிலாந்தில் பிரசித்தி பெற்ற போலேட் வில்சன் செயற்பட்டாளர் விருதுப் பிரிவில்

பேட்டன் விருது பெற இலங்கை, சாய்ந்தமருதைச் சேர்ந்த சிறுமி மரியம் ஜெஸீம் தகுதி பெற்றுள்ளார் .

இங்கிலாந்தில் பல பாகங்களில் இருந்து கிடைக்கப் பெற்ற நூற்றுக் கணக்கான விண்ணப்பதாரர் களிலிருந்து விருது பெறத் தெரிவான இறுதித் தேர்வாளர்களில் ஒருவராக சாய்ந்தமருது மர்யம் ஜெஸீம் இடம் பிடித்துள்ளார் .

இவ்விருது பெற தெரிவான இறுதித் தேர்வாளர்களுள் மரியம் ஜெஸீம் மட்டுமே சிறு வயதுடையவர் என்பது குறிப்பிடத்தக்கத.

மரியம் தெரிவான பிரிவில் தெரிவானவர்களுள் தாயும் மகளுமான வழக்கறிஞர்களும் அடுத்து ஒரு நூலாசிரியரும் உள்ளனர். இவர்களுடன் பதினொரு வயதுடைய மரியத்தின் செயற்பாடுகள் இவ்விருதில் பணியாற்றிய பல நடுவர்களை ஈர்த்து இறுதித்




தேர்வாளர்களுள் ஒருவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



# கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரிக்கு கல்வி அபிவிருத்தி மையத்தினர் பாராட்டு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

க.பொ.த.சாதாரணதர பரீட்சை முடிவுகளில் சிறந்த பெறுபேற்றினை பெற்ற கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரிக்கு பாடசாலை பாடசாலை கல்வி அபிவிருத்தி மைய உறுப்பினர்கள் நேரடியாக சென்று நேரடியாக வாழ்த்துத் தெரிவித்தனர் .

வெளியிடப்பட்ட க.பொ.த. சாதாரணதர பரீட்சை முடிவுகளில் கல்முன் கல்வி வலயத்தில் சிறந்த பெறுபேற்றை பெற்றுள்ள கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் ,பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித்தலைவர் வகுப்பாசிரியர்கள் மற்றும் பாட ஆசிரியர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. பாடசாலை கல்வி அபிவிருத்தி மையம் ஒழுங்கு செய்திருந்த நிகழ்வில் அதன் உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

பரீட்சையில் 23 மாணவர்கள் சகல பாடங்களிலும் ஏ சித்தியும்,11 மாணவர்கள் 8 பாடங்களில் ஏ சித்தியும், 11 மாணவர்கள் 7 பாடங்களில் ஏ சித்தியும் அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் உயர்தரம் கற்க தகுதியும் பெற்றுள்ளனர்.



# அக்கரைப்பற்றில் புள்ளி விபரம் திரட்டல் உதவிப் பிரதேச செயலாளர் கள விஜயம்

(எம்.எப்.நவாஸ்)

அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவில் நடைபெற்ற புள்ளி விபர திணைக்களத்தின் தரவேற்றல் செயற்பாடுகளை நேரில் கண்டறியும் கள விஜயம் இன்று உதவிப் பிரதேச செயலாளர் றாசித் எஹ்யா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் புள்ளிவிபர திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பி.எம்.பி.அனுர குமார திசாநாயக்க, மாவட்ட புள்ளிவிவர திணைக்களத்தின் பணிப்பாளர் இந்திக விஜயகோன், வலய புள்ளி விபர திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஜானக சஜித் ஆகியோரும் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம். தமீம், மேற்பார்வை உத்தியோகத்தர்கள் என்.ரீ.மசூர், திட்ட முகாமையாளர் யூ.எல்.ஆஹீர், புள்ளி விபர அபிவிருத்தி உத்தியோகத்தர், இணைப்பாளர்கள், நிரற்படுத்தல் உத்தியோகத்தர்கள் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

# அமெரிக்காவின் பேச்சுவார்த்தைக்கான அழைப்பை நிராகரித்தது வட கொரியா

தங்களுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று அமெரிக்கா விடுவித்த அழைப்பை வட கொரியா நிராகரித்துள்ளது.

இது குறித்து அந்த நாட்டு அதிபர் கிம் ஜோங்-உன்னின் சகோதரி கிம் யோ-ஜாங் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒரு சுதந்திர நாட்டின் இறையாண்மை என்பது பேச்சுவார்த்தையின் மூலம் சமரசம் செய்து கொள்ளக்கூடியது அல்ல.

எனவே, அதற்காக அமெரிக்கா விடுக்கும் அழைப்பை ஒருபோதும் ஏற்க முடியாது என்று தெரிவித்துள்ளார்.

சோவியத் யூனியனின் ஆதரவுடன் வட கொரியாவும், அமெரிக்க ஆதரவுடன் தென் கொரியாவும் நடத்திய கொரியப் போர் கடந்த 1953 இல் முடிவுக்கு வந்தது.

அதன் பிறகும் அமெரிக்கா - வடகொரியா நாடுகளுக்கு இடையே பதற்றம் நீடித்து வருகிறது. இருந்தாலும், கடந்த 2018 இல் அப்போதைய அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பும், வட கொரிய அதிபர் கிம் ஜோங்-உன்னும் 3 முறை நேரில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். இருந்தாலும், இந்தப் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

இந்த நிலையில், தனது உளவு செயற்கைக்கோளை வட கொரியா அண்மையில் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியதற்கு கண்டனம் தெரிவித்த அமெரிக்கா, தங்களுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த வட கொரியாவுக்கு அழைப்பு விடுத்தது. (04)



# ஸ்பெயினில் வறட்சி பாதித்த வட கிழக்குப் பகுதியில் தண்ணீர்ப் பாவனைக்கு கடுமையான கட்டுப்பாடுகள்



ஸ்பெயின் நாட்டில் வறட்சி பாதித்த வட கிழக்குப் பகுதியில் தண்ணீர்ப் பாவனைக்குக் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

ஸ்பெயினின் தன்னாட்சிப் பகுதியான கடலோனியாவின் தலைநகரான பார்சிலோனாவுக்கு எதிர்வரும் மாதங்களில் பயன்பாட்டுக்கான தண்ணீரைப் படகுகளில் கொண்டுவரும் தேவை ஏற்படலாம் என கடலோனிய நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பாவின் ஐந்தாவது பெரிய நகரும் ஸ்பெயினின் இரண்டாவது பெரிய நகருமான பார்சிலோனா உள்ளிட்ட கடலோனியாவின் 60 லட்சம் மக்களுக்குத் தண்ணீர் வழங்கும் ஏரிகளின் கொள்ளளவில் 18 சதவீதமே தண்ணீர் இருக்கிறது. ஸ்பெயின் நாட்டிலுள்ள அனைத்து ஏரிகளையும் சேர்த்தால் கொள்ளளவில் வெறும் 43 சதவீதம் மட்டும் தண்ணீர் இருக்கிறது.

கடலோனியாவில் வறட்சிக் காலம் நீடித்த நிலையில், பருவகால மாற்றங்கள் காரணமாக வெப்பமும் வறண்ட காலநிலையும் இணைந்துகொண்டதே தற்போதைய மோசமான நிலைமைக்குக் காரணம் என்று ஸ்பானிய அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏற்கெனவே, ஐரோப்பாவின் மிகப் பெரிய கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்தைத்தான் குடிநீருக்காக பார்சிலோனா நம்பியிருக்கிறது.

கடலோனியா தற்போது அதிகாரப்பூர்வமாகவே வறட்சியைப் பொறுத்தவரையில் 'நெருக்கடி நிலைக்கு முந்தைய' கட்டத்தை எட்டியுள்ளது. இதன் காரணமாக ஒரு நாளுக்கான தனிநபரின் தண்ணீர்ப் பயன்பாடு 230 லீற்றர்களிலிருந்து 210 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

கடலோனியா முழுவதும் வீதிகளைச் சுத்தப்படுத்தவும் புல்வெளிகளுக்குத் தண்ணீர் தெளிப்பதற்கும் குடிதண்ணீரைப் பயன்படுத்துவதற்கு உள்ளாட்சி நிர்வாகங்கள் தடை விதித்திருக்கின்றன. தொழிற்சாலைகள் மற்றும் விவசாயத்துக்கான தண்ணீர்ப் பயன்பாட்டுக்கும் கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தண்ணீர் வழங்கும் ஏரிகளில் இருப்பின் அளவு 16 சதவீதத்துக்கும் கீழே குறைந்தால் முழு நெருக்கடி நிலை ஏற்படும். தண்ணீர்ப் பயன்பாட்டுக்கான கட்டுப்பா-டுகள் மேலும் அதிகரிக்கப்படும். விவசாயத்துக்குத் தண்ணீரைப் பயன்படுத்த அரசின் முன் அனுமதி பெற வேண்டியிருக்கும்.

இப்போதைக்குள் மழை பெய்யாவிட்டால் இன்னும் சில வாரங்களில் இந்த நிலை ஏற்பட்டுவிடும் என்று அரச அலுவலர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

ஒருவேளை மழை பெய்யாவிட்டால் குடிநீரை தாங்கிகளில் கொண்டுவருவதைத் தவிர வேறு வழியில்லாமல் போய்விடும். வறட்சிக் காலத்தில் இது மிகவும் செலவாகக் கூடிய ஒன்றாக இருக்கும். 2008 வறட்சியின்போதும் இவ்வாறுதான் தண்ணீர் கொண்டுவரப்0பட்டது.

நாம் எல்லாவற்றுக்குமே ஆயத்தமாக இருக்க வேண்டியுள்ளது. கடந்த சில மாதங்களாக நிலவும் நிலைமை தொடர்ந்தால் படகுகளில் தண்ணீர் கொண்டுவருவதைத் தவிர வேறு வழியுமில்லை, என்று கடலோனியப் பிராந்தியத் தலைவர் பியர் ஆரகன்ஸ் தெரிவித்துள்ளார்.

தாங்கிகளில் தண்ணீர் கொண்டுவருவது தொடர்பாக ஸ்பெயின் அமைச்சரவையுடன் கலந்துரையாடி வருவதாகவும் ஆரகன்ஸ் குறிப்பிட்டார். (04)

# ஜெருசலேம் சரமாரியான துப்பாக்கிச்சூடு மூன்று பேர் உயிரிழப்பு - அறுவர் காயம்!



ஜெருசலேம் நகரில் 2 பாலஸ்தீனர்கள் நடத்திய சரமாரியான துப்பாக்கிச்சூட்டில் 3 இஸ்ரேலியர்கள் உயிரிழந்து, 6 பேர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து பொலிசார் தகவல் வழங்குகையில், ஜெருசலேம் நகருக்குள் வருவதற்கான முக்கிய பாதையான வீஸ்மன் தெரு பேருந்து நிலையத்துக்கு 2 பாலஸ்தீனர்கள் துப்பாக்கிகளுடன் காலை சுமார் 7.40 க்கு வந்தனர். அங்கு பேருந்துக்காக காத்திருந்தவர்களை நோக்கி அவர்கள் சரமாரியாக சுட்டனர். இதில் 3 பேர் உயிரிழந்தனர். 6 பேர் காயமடைந்தனர். அவர்களில் இருவரது உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது.

அந்தப் பகுதியில் இருந்த 2 பணியில் இல்லாத பாதுகாப்புப் படை வீரர்களும், ஆயுதம் ஏந்திய பொதுமக்களும் தாக்குதல் நடத்திய 2 பேரையும் சுட்டுக் கொன்றனர் என்று தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ள வீடியோவில், பேருந்து நிலையத்திலிருந்து பொதுமக்கள் நாலாபுறமும் அலறியடித்தபடி ஓடும் காட்சியும், அவர்களை நோக்கி இருவர் துப்பாக்கியால் சுடும் காட்சியும் இடம் பெற்றுள்ளன.

இந்தத் தாக்குதலை நடத்திய இருவரும் ஹமாஸ் அமைப்பின் உறுப்பினர்கள் என்று இஸ்ரேல் உள்நாட்டு உளவுத்துறை அமைப்பான 'ஷின் பெட்' தெரிவித்துள்ளது.

முரத் நமர் (38), இப்ராஹிம் நமர் (30) ஆகிய இருவரும் கிழக்கு ஜெருசலேமைச் சேர்ந்தவர்கள் எனவும், பயங்கரவாதச் செயல்களுக்காக அவர்கள் இருவரும் சிறைத்தண்டனை பெற்றுள்ளதாகவும் ஷின் பெட் கூறியது.

தற்போது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட வீஸ்மன் தெரு பேருந்து நிலையத்தில்தான் ஓராண்டுக்கு முன் னர் குண்டுவெடிப்புத் தாக்குதல் நடத்தப்பட்டது நினைவு கூரத்தக்கது.

இஸ்ரேல் மீது ஆயிரக்கணக்கான ஏவுகணைகளை வீசியும், அந்த நாட்டுக்குள் ஊடுருவியும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த மாதம் 7-ஆம் தேதி நடத்திய தாக்குதலில் 1,200-க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

இஸ்ரேலுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியபோது தங்களால் பிடித்துச் செல்லப்பட்ட சுமார் 240 பிணைக் கைதிகளில் ஒரு பகுதியினரை விடுவிக்க ஹமாஸ் அமைப்பும், அதற்குப் பதிலாக தங்கள் நாட்டுச் சிறைகளில் உள்ள பாலஸ்தீன கைதிகளை விடுவிக்க இஸ்ரேலும் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் ஒப்புக்கொண்டு போர் நிறுத்தத்தை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)



# இந்திய ராணுவத்தின் போர்த் திறனை வலுப்படுத்துவதற்கு அனுமதியளிப்பு!

இந்திய ராணுவத்தின் போர்த் திறனை வலுப்படுத்தும் நோக்கில் 2.23 லட்சம் கோடிக்கு பாதுகாப்புச் சார்ந்த திட்டங்களுக்கு முதல் ஒப்புதலை இந்தியப் பாதுகாப்பு அமைச்சகம் அளித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் இந்திய விமானப் படைக்கு 97 தேஜஸ் இலகுரக போர் விமானங்களும் 156 பிரசாந்த் போர் ஹெலிகொப்டர்களும் கொள்முதல் செய்யப்படவுள்ளன.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் தலைமையிலான ஆயுதக் கொள்முதல் சபை (டிஏசி) இந்தத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

கிழக்கு லடாக்கில் இந்தியா கடந்த மூன்றாண்டுகளாக சீனாவுடன் சிறிய சிறிய மோதல்களை எதிர்கொண்டுவரும் நிலையில் இந்த ஒப்புதல் வழங்கப்பட்டது.

இந்தக் கொள்முதலில் 98 சதவீதம் உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்தே வாங்கப்படவுள்ளதாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்தியாவின் ஆத்மநிர்பர்தா (சுய சார்பு) இலக்கை நோக்கிய முன்னெடுப்பாக இதனை பாதுகாப்பு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், பொதுத்துறை நிறுவனமான ஹிந்துஸ்தான் ஏரோனோடிக்ஸ் லிமிட்டட் நிறுவனத்தால் நிர்வாகிக்கப்படும் போர் விமானங்களை மேம்படுத்தவும் டிஏசி ஒப்புதல் அளித்துள்ளது.

இவை தவிர, தானியங்கி இலக்குக் கண்காணிக்கும் ட்ரக்கர் டி-90 டாங்கர்களுக்கான எண்ம கணினி, மத்திய தர கப்பல் தாக்கும் ஏவுகணை ஆகியவையும் கொள்முதல் செய்யப்படவுள்ளன.

போர் உபகரணங்களுக்காக வெளிநாட்டைச் சார்ந்திருக்கும் தேவையை இது குறைக்கும் எனவும் இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (04)

# கச்சா எண்ணெய் உற்பத்தியை மீண்டும் குறைக்கிறது சவுதி

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரை கச்சா எண்ணெய் உற்பத்தியை நாளொன்றுக்கு 10 லட்சம் பரல் அளவுக்குக் குறைக்க உள்ளதாக சவுதி அரேபியா அறிவித்துள்ளது.

சர்வதேசச் சந்தையில் குறைந்து வரும் கச்சா எண்ணெயின் விலையை அதிகரிக்க எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு (ஒபெக் பிளஸ்) எண்ணெய் உற்பத்தியை குறைத்தும் பலன் அளிக்காததால் சவுதி இம்முடிவை எடுத்துள்ளது.

இதுகுறித்து சவுதி அரேபிய எரிசக்தித்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், நாளொன்றுக்கு 10 லட்சம் பரல்கள் அளவு எண்ணெய் உற்பத்தியை குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. 2024 மார்ச் மாதம் வரை இது அமலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.



இதேவேளை, வருகின்ற ஜனவரி மாதம் ஒபெக் பிளஸ் கூட்டமைப்பில் பிரேசில் இணையவுள்ளதாக அந்த அமைப்பு அறிவித்துள்ளது.

# “ட்ரோன்” மூலம் பீடைநாசினி வீசும் முறை அம்பாறையில் அறிமுகப்படுத்தப்பட்டது



(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் “ட்ரோன்” தொழில்நுட்பம் மூலம் பீடை நாசினி வீசுகின்ற புதிய நடைமுறை அம்பாறையில் அறிமுகமாகியுள்ளது.

அம்பாறை மாவட்ட விவசாய திணைக்களம் இது தொடர்பான விளக்க செயல் முறைப் பயிற்சியை நேற்று அம்பாறையில் நடத்தியது. அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பிரதேச விவசாய போதனாசிரியர்கள் இதில் கலந்து கொண்டார்கள்.

விவசாய திணைக்களப் பொறியியலாளர் இதற்கான விளக்கத்தையும் செயல்முறை பயிற்சியையும் அங்கு வழங்கினார்.

ஒரு ஏக்கர் வயல் நிலத்திற்கு பீடை நாசினி வீசுவதற்கு நான்கு நிமிடங்களே போதுமானது என்பதனை இதன் மூலம் அறிய முடிந்தது.

இவ்வாறான விளக்க செயன்முறை பயிற்சிகள் விவசாயிகள் மத்தியிலும் பிரதேச ரீதியாக முன் கொண்டு செல்லப்பட இருக்கின்றன.

இப்புதிய தொழிநுட்ப முறையை வயலுக்கு மாத்திரமல்லாமல் கரும்பு சோளம் போன்ற பயிர்ச் செய்கைகளுக்கும் பயன் படுத்தமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

# கல்முனையில் உலக எயிட்ஸ் தின விழிப்புணர்வுச் சைக்கிளோட்டம்






(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல். எம். றிபாஸ் அவர்களின் வழிகாட்டலிலும், கல்முனை பிராந்திய பாலியல் தொற்று நோய்கள் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.என்.எம். தில்ஷான் அவர்களின் ஒருங்கிணைப்பிலும், நிந்தவூர் ஆதார வைத்தியசாலை ஏற்பாடு செய்திருந்த “உலக எயிட்ஸ் தின விழிப்புணர்வூட்டல் சைக்கிளோட்டம்”, வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.பி. அப்துல் வாஜித் தலைமையில் இன்று இடம்பெற்றது.

இச் சைக்கிளோட்டத்தில் நிந்தவூர் லிவிங் வெல் அமைப்பின் சைக்கிளோட்ட வீரர்கள் பிரதானமாகப் பங்குபற்றியதோடு, நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மற்றும் நிந்தவூர் ஆயுள்வேத வைத் என்பனவும் கலந்துகொண்டன.







# இந்திய உயரஸ்தானிகர் கோபால் பாக்லே யாழில் உலருணவு பொதிகளை வழங்கினார்

இலங்கைக்கான இந்திய உயரஸ்தானிகர் கோ-பால் பாக்லே யாழ்ப்பாணத்தில் வறிய மக்களுக்கும் கடற்றொழிலாளர்களுக்கும் உலருணவுப் பொதிகளை வழங்கிவைத்தார்.

யாழ்ப்பாணம் பண்பாட்டு மையத்தில் இன்று காலை 11 மணியளவில் நடைபெற்ற நிகழ்விலேயே 480 பேருக்கான உலருணவுப் பொதிகள் அவரால் வழங்கி வைப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (01)

# சம்மாந்துறை மக்களுக்கு காணி உறுதிப் பத்திரம்



(அஸ்ஹர் ஆதம்)

சம்மாந்துறை பிரதேச மக்களுக்கான காணி உறுதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வு சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் பிரதேச செயலாளர் எஸ்.எல். எம்.ஹனீபா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ. எல்.எம் அதாஉல்லா, சட்டத்தரணி எஸ்.எம்.எம் முஷாரப் உட்பட அரச உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.




# யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு இந்திய அரசாங்கம் விசேட நிதியுதவி!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் 100 பேருக்கு, இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படவுள்ள நிதியுதவிச் செயற்றிட்டம் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.


யாழ்ப்பாணத்துக்கு மூன்று நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே இந்த நிதியுதவித் திட்டத்தை இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைத்தார். இத்திட்டத்துக்கான முதற் கட்ட நிதி ரூபா மூன்று மில்லியன் இன்று காலை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் மற்றும் மாணவர் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது. அத்துடன் இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் கலாசார உறவுகளுக்கான பேரவையின் உயர்கல்விப் புலமைப்பரிசில் (ஐ. சி.சி.ஆர்) பெற்று இந்தியாவில் உயர்கல்வி பெறச் செல்லும் இந்து கற்கைகள் பீட விரிவுரையாளர்கள் இருவருக்கான அனுமதிக் கடிதமும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், கொழும்பிலுள்ள இலங்கைக்கான இந்தியத் தூதரக அதிகாரிகள், யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், பல்கலைக்கழகப் பதிவாளர், நிதியாளர், பீடாதிபதிகள் மற்றும் மாணவர் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

பொருளாதார நிலையில் சவாலுக்குட்பட்டுள்ள பல்கலைக் கழக மாணவர்கள் 100 பேரின் வாழ்வாதாரச் செயற்பாடுகளுக்காக ஒவ்வொருவருக்கும் மாதாந்தம் தலா ஐயாயிரம் ரூபா விசேட நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 11 ஆம் திகதி, யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தை யாழ்ப்பாண மக்களுக்கு உவந்தளிக்கும் நிகழ்வுக்கு இந்தியப் பிரதமரின் விசேட பிரதிநிதியாக வந்திருந்த இராஜாங்க அமைச்சர் கலாநிதி எல். முருகன் அறிவித்தபடி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களில் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த 100 பேருக்கு விசேட நிதியுதவியை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் முடிவு செய்திருந்தது.

இந்தத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் சகல பீடங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்டு முன்மொழியப்பட்ட ஒவ்வொரு மாணவனுக்கும் நடப்புக் கல்வி ஆண்டில் இருந்து, அடுத்து வரும் ஒரு வருட காலத்துக்கு இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது.


JRIDE
BEYOND THE ROAD
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்குங்கள்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358